தலைப்பு 273 - புத்தளம் மாவட்ட செயலகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 273 - புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் தவிர்த்து, புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு,அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேந்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பந்திகள் தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **கடந்த வருடத்திற்குரிய அறிக்கைக்கான தொடர்பு** | **நடைமுறைப்படுத்தப்பட்டிராத பரிந்துரைகள்** | **இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|
| 3.5(அ) | பழுது பார்க்க வேண்டிய உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு பொருத்தமான முறையில் தயாரிக்கப்பட்ட வருமானத்தை ஈட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 3.5(உ) |
| 3.5(ஆ) | தாமதம் இன்றி காணிகளை பெற்றுக் கொண்டு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 3.7(இ) |
| 3.7(அ) | 14 ஆவது பட்டியல் செலுத்தும் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டியதாக உள்ளபோது அதற்கமைய நடவடிக்கை எடுக்காமையால் வட்டி செலுத்த நேர்ந்துள்ளமையால் அது தொடர்பில் பரிசோதித்து பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனம் கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 3.6(ஆ) |
| 3.8 | உரிய பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியது சாத்தியவள கற்கையினை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திலே என்பதுடன் வழங்கப்படும் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு இணக்கமாக காணப்படுகிறதா என்பதை கருதி மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 3.7(எ) |
| 3.9(அ) | கூடுதலாக செலுத்தப்பட்டவைகள் உரிய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். | 3.6(அ) |
| 3.9(ஆ) | செயற்திறனாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2.1 |

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்
### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்
### 1.6.1.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் SA/GFS/01/01/08 – Volume ஆம் இலக்க 2022 டிசம்பர் 20 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான இனம் காணப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்து கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் மாவட்ட செயலகங்களுக்கு சொந்தமானதாக இனம் காணப்பட்ட 49 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள், 06 உத்தியோகபூர்வ இல்லங்கள், அரசின் 13 பொது கட்டிடங்கள் மற்றும் சன சமூக நிலையம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் 2023 ஆம் ஆண்டில் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 09 பிரதேச செயலகங்களுக்கு உரிய நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத் தரமற்ற 12693 சதுர அடிகள் பரப்பளவான 11 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் அவை அமைந்துள்ள காணிகளின் கூட்டுத்தொகை 6.6 ஏக்கர் 02 றூட் 12.7 பேர்ச் ஆன காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டிடங்களின் விபரங்கள் விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு மதிப்பிடப்பட்டு 2023 ஆம் ஆண்டில் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாதம்பே கமல சேவைகள் செயற்குழுவினால் பயன்படுத்தப்பட்டு மீள ஒப்படைக்கப்பட்டிருந்த மாதம்பே பிரதேச செயலகத்திற்கு உரிய கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிராததுடன் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைப்பதற்கு மாவட்ட செயலகத்தினால் இனம் காணப்பட்டிருந்த சொத்துக்களின் பட்டியலிலும் அது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . | கட்டிடங்களின் விபரங்கள் விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இடர் முகாமைத்துவ இணைப்பு அலகினால் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த வள்ளம் மற்றும் எஞ்சின் ஒன்று, 18 உயிர் கவசங்கள், மெகா ∴போன் ஒன்று, 08 தண்ணீர் தாங்கிகள், 04 தண்ணீர் மோட்டார்கள் ஆகியவற்றுடன் உழவு இயந்திரம் மற்றும் 08 பௌசர்கள் சுவீகரிக்கப்பட்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடர் முகாமைத்துவ இணைப்பு பிரிவில் கிடைத்திருந்த பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்களின் கிரயத்தினை பெற்று 2023 ஆம் ஆண்டினுள் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | சொத்துக்களின் கிரயத்தினை பெற்று கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | தேசிய இடர் நிவாரண சேவை நிலையத்தினால் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 13 உழவு இயந்திரங்கள் மற்றும் 13 ட்ரெய்லர்கள் 09 லொறி பௌசர்கள் சுவீகரிக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய இடர் நிவாரண சேவை நிலையத்தினால் வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரம் மற்றும் 13 டெய்லர்கள் 2023 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் லொறிகள் தொடர்பில் அறிவுரை பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | கிடைக்க பெற்றுள்ள அனைத்து வாகனங்களின் கிரயத்தை பெற்று கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிறிய மற்றும் நடுத்தர அறவிலான நெல் ஆலை உரிமையாளர்களின் ஊடாக நெல் கொள்வனவு செய்து அரிசி ஆக்கி வழங்கும் அடிப்படையில் அரசினால் 2020/21 பெரும் போகத்தில் 14 ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபாய்.100,161,424 ஆன பணத்திற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபாய்.32,685,875 பெறுமதியான அரிசி 422,502 கிலோகிராம்கள் மற்றும் 2021 சிறு போகத்தில் 19 அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபாய்.77,880,000 ஆன தொகைக்காக பெற வேண்டிய அரிசி 1,006,678 கிலோகிராம்கள் 2023 மே 30 திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. | பொது திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அரிசியின் விலையின் அடிப்படையில் வழங்கப்படாத அரிசிக்கான பெறுமதியினை பெற்றுக் கொள்வதற்கு 2023 ஜூன் 30 ஆம் திகதி வரையிலுமான நிவாரண காலம் ஒன்று வழங்கப்பட்டுள்ளமையால் அத்திகதிக்கு முன்னர் அரிசியின் நிதி ரீதியான பெறுமதியை செலுத்துமாறு அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பொது திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கமைய செயற்திறனுடன் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 சட்டம், விதிகள் மற்றும் பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே ஒப்பீடு செய்யப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| சட்டம், விதிகள், மற்றும் பிரமாணம் ஆகியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | | |
| | ரூபா | | | |
| **(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 109 ஆம் பந்தி** | | | | |
| நிதிப்பிரமாணம் 109 | 2,384,780 | மாவட்ட செயலகத்தின் 13 வாகன விபத்துகளுக்கு | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ பொதுக்கூட்டங்களில் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உரியதாக பதிவழிக்கப்பட்ட அழிவு நட்டங்களுக்கு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய குழு ஒன்றினை நியமித்து உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ii)** | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | | |
| (அ) | 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | அரச நிறுவனம் ஒன்றிலிருந்து சேவையினை பெறும் பொது மக்களுக்கு உரிய தேவைகளை துரிதமாகவும் செயல் திறனாகவும் தரத்துடனும் தொடர்ச்சியாகவும் நிறைவேற்றப்படுகின்றது என்பதற்கான எழுத்து மூல கடப்பாடு ஒன்றினை உருவாக்கும் நோக்கில் அனைத்து அரச நிறுவனங்களாலும் பிரஜைகள் / சேவை பெறுநர் விஞ்ஞாபனம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளமையும் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டிருந்ததுடன் 06 மாதங்களில் அனைத்து அரச நிறுவனங்களும் அதற்கமைய செயல்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் அதற்கமைய மாவட்ட செயலகம் செயற்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலும் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக சாதாரணமாக அலுவலக நடவடிக்கைகள் இடம்பெறாமையால் சேவை பெறுநர் விஞ்ஞாபனத்திற்கு அமைய செயற்பட முடியாதிருந்தது. தற்போது பிரஜைகள் விஞ்ஞாபனத்தினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் இரண்டாம் பிரிவு | - | நிறுவனத் தலைவர் உள்ளடங்களாக அனைத்து ஊழியர்களும் தமது வருகையினை கைவிரல் அடையாள இயந்திரம் மற்றும் பதிவேட்டின் மூலம் சான்றுபடுத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டு இருந்த போதிலும் மஹாவெவ, ஆனமடுவ மற்றும் கறுவலகஸ்வெவ ஆகிய பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் கைவிரல் அடையாள இயந்திரத்தின் ஊடாக பதிவு செய்யப்படாது காணப்பட்டதுடன் வருகை மற்றும் வெளிச்செல்லல பதிவேட்டின் தகவல்களின் அடிப்படையில் மேலதிக நேர படிகள் மற்றும் விடுமுறை தின சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கைவிரல் அடையாள இயந்திரம் செயலிழந்திருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்டமையின் அடிப்படையில் இயந்திரத்தினை கொள்வனவு செய்ய முடியாதிருந்தது. மாதம்பே பிரதேச செயலகம் தற்போது பழைய நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன் மூலதன செலவினங்களுக்கான அங்கீகாரத்தினை வழங்கிய பின்னர் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கைக்கமைய உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி பத்திரத்திற்கமைய செயல் வழி விதி 01 ஆம் தொகுதியின் XVII அத்தியாயத்தின் 202 ஆம் பிரிவு மற்றும் 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய மற்றும் 18/2001 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | ஒருங்கிணைந்த சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றல் நடைமுறையில் 2.2.2 பந்திக்கமைய ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிறைவு செய்துள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் மஹாதும்புகடவல, முந்தளம், புத்தளம், கறுவலகஸ்வெவ ஆகிய பிரதேச சபைகளின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக 5-9 வருடங்களுக்கு இடைப்பட்ட சேவை | ஒருங்கிணைந்த சேவைகளில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட சேவை காலத்தினை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பிலான தகவல்கள் உள்ளடங்கிய பட்டோலை தயாரிக்கப்பட்டு ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | குறித்த சுற்றறிக்கை சட்ட விதிகளுக்கு அமைய இடமாற்றல் நடைமுறையை செயல்படுத்துவதற்கும் உள்ளக ரீதியில் இடமாற்றல் நடைமுறையை பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

காலத்தினை நிறைவு செய்த 347 உத்தியோகத்தர்கள் தொடர்பில் மேற்படி இடமாற்றல் நடைமுறைக்கமைய செயற்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டுக்காக மாவட்ட செயலகத்தின் ஒருங்கிணைந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதனுள் உள்ளடங்கியுள்ள செயல்பாடுகளின் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு செயல் முன்னேற்ற அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பணிகளின் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு செயல் முன்னேற்ற அறிக்கையொன்று தயாரிப்பதற்கு 2022 ஆம் ஆண்டு தவறியுள்ளதுடன் எதிர்காலத்தில் தயாரிக்கப்பட வேண்டும் என உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2022 ஆம் ஆண்டுக்கான முந்தளம் பிரதேச செயலகத்திற்கு கிடைத்திருந்த பாராளுமன்ற அமைச்சரின் நிதி ஏற்பாட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 15 செயல் திட்டங்களில் 05 | இந்த செயல் திட்டங்களுக்கு உரிய முன்மொழிவுகள் அமைச்சரினாலேயே முன்வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவை அமைச்சரினாலேயே திருத்தப்பட வேண்டும். | முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய அபிவிருத்தி பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயல்திட்டங்கள் பாடசாலைகளில் வாயில் பலகைகளை தயாரிப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கான ஒரு செயல் திட்டத்திற்கு ரூபாய்.776,000 படியாக ரூபாய்.3,880,000 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே அனைத்து நுழைவாயில்களிலும் உள்ள பலகைகளினதும் மேலே பாடசாலையின் பெயர் குறிப்பிட்ட பலகை ஒன்று பொருத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபாய்.80,000 படி ரூபாய்.400,000 செலவிடப்பட்டிருந்தது. இந்த அனைத்து பாடசாலைகளும் கிராமிய ரீதியில் காணப்பட்ட கஷ்டப் பிரதேசங்களின் பாடசாலைகள் ஆவதுடன் பாரிய அளவிலான வாயிற்பலகைகளை நிர்மாணிப்பதை காட்டிலும் அதனை விட முக்கியமான அபிவிருத்தி பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அந்த முன்மொழிவுகள் பாடசாலையின் அதிபர்களின் கோரிக்கையின் அடிப்படையில் அமைச்சரின் நேரடி நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன. | |
| (ஆ) | முந்தளம் பிரதேச செயலகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த புதிய அலுவலக கட்டிடத்தின் நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்பட்டு ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் நிலவும் குறைபாடுகளாக பிரதேச செயலாளரினால் இனங்காணப்பட்டிருந்த 22 குறைபாடுகளில் படிகளை நிர்மாணித்தல் உள்ளடங்களான இரு விடயங்கள் திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முந்தளம் புதிய அலுவலக கட்டிடத்தின் நேர்மையான பணிகளில் இனங்காணப்பட்ட குறைபாடுகள் புதிய மதிப்பீடு ஒன்றில் உள்ளடக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு கிடைக்கப்பெற்றால் நிறைவேற்றப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | இனங்காணப்பட்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் போது அரசாங்கத்திற்கு ஏற்படும் நட்டத்தினை உரிய பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 ஆம் ஆண்டில் நாத்தாண்டிய பிரதேச செயலகத்தின் 17 பிரிவுகளின் 159 நலனாளிகளுக்கு ரூபாய்.1.903,067 தொகை செலவிடப்பட்டு மஞ்சள் பயிரிடும் செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த துடன் அதன் நலனாளி ஒருவருக்கு அண்ணளவாக ரூபாய்.10,000 பெறுமதியான மஞ்சள் கன்றுகள் மற்றும் பயிரிடும் பைகள் (பொலிஷெக் பேக்) வழங்கப்பட்டிருந்தன. மஞ்சளின் விலை தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைந்தவாறு காணப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில் அதாவது கடந்த வருடத்தில் ஒரு கிலோகிராம் மஞ்சள் ரூபாய்.800 - ரூபாய்.1,000 ஆக காணப்பட்ட விலை ரூபாய்.180 வரை குறைவடைந்த சந்தர்ப்பத்தில் விலை தளம்பல்கள் மற்றும் ஏனைய இடர்கள் தொடர்பில் சாத்தியவள கற்கை ஒன்றினை மேற்கொள்ளாது செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த மையால் விளைச்சலை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் ஒரு கிலோகிராம் மஞ்சள் ரூபாய்.60 வரை குறைவடைந்திருந்தது. அதற்கமைய நலனாளிகளுக்கு ரூபாய்.2,000 - ரூபாய்.3,000 இற்கு இடைப்பட்ட வருமானம் கிடைத்திருந்ததுடன் அது அரசு மஞ்சள் கன்றுகள் மற்றும் பயிரிடும் பைகளுக்கு செலவிடப்பட்ட தொகையையேனும் பூர்த்தி செய்ய போதுமானதாக காணப்படவில்லை. | நடைமுறைப்படுத்தப்பட்ட மஞ்சள் பயிரிடும் செயல்திட்டத்திற்கான சாத்தியவள கற்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் செலவிடப்பட்ட தொகையான ரூபாய்.1.903,067 இனை விட ரூபாய்.3,053,325 ஆன மேலதிக வருமானம் மஞ்சள் பயிரிட்டவர்களால் ஈட்டப்பட்டிருந்தது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்காய்விற்கு உரிய சான்றுபடுத்தல்களுடன் பதில் வழங்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்டத்தை நிறைவு செய்யாது கைவிடப்படுகின்றமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராம சக்தி சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பணத்தில் மாதம்பே, நாதாண்டிய, ஆனமடுவ மற்றும் முந்தளம் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உரிய 45 செயலிழந்த சங்கங்களுக்கு ரூபாய்.23,913,494 ஆன தொகை 04 வருட காலமாக விளைவற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் புத்தளம் பிரதேச செயலக பிரிவின் 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய 12 சங்கங்களில் காணப்படும் ரூபாய்.9,901,991 ஆன மீதி அந்த சங்கங்கள் செயலிழந்தமையால் விளைவற்று காணப்பட்டது. | தற்போது சௌபாக்கியா உற்பத்தி பணியகத்தின் கீழ் கிராம சக்தி நிகழ்ச்சி திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டவாறு உள்ளதுடன் செயலிழந்துள்ள சங்கங்களின் பணத்தை செயற்பாட்டில் உள்ள சங்கங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாத்தாண்டிய பிரதேச செயலகத்தினால் ரூபாய்.2,969,975 செலவிடப்பட்டு 05 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட 04 செயல்திட்டங்களில் இருந்து எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ளாது அழிவடைந்தவாறு காணப்பட்ட போதிலும் ரூபாய்.3,876,375 செலவிடப்பட்டு 05 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட பௌத்த அறநெறி பாடசாலை கட்டிடங்கள் 04 மற்றும் ஆறாமையொன்றின் மலசலகூட கட்டமைப்பு ஒன்று இதுவரையிலும் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு | 04 செயல்திட்டங்களில் 02 செயல் திட்டம் தற்போது பயன்படுத்தக்கூடிய மட்டத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளமையும் ஏனைய செயல் திட்டங்கள் பயன்படுத்தக்கூடிய மட்டத்தில் நிறைவு செய்வதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பயன்படுத்தக்கூடிய நிலைக்கு நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வென்னப்புவ பிரதேச செயலகத்தினால் மத்திய அரசுக்கு சொந்தமான காணிகளின் உரித்தினை ஏனைய திணைக்களங்களுக்கு சாட்டுதல் நிறைவு செய்யப்படாது உள்ளபோது ஏனைய திணைக்களங்களால் பயன்படுத்தப்படும் காணிகளில் அத்துமீறிய நடவடிக்கைகள் அறிக்கையிடப்பட்டதும் உடனடியாக அது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்தல் மாத்திரம் இடம்பெறுவதுடன் பின் தொடர்தல் மேற்கொண்டு ஆண்டின் இறுதியில் வருடாந்த மீளாய்வு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வென்னப்புவ பிரதேச செயலக பிரிவிற்கு உரிய ஏனைய திணைக்களங்களின் கட்டுப்பாட்டிற்கு உட்படும் காணிகளில் இடம்பெறும் அத்து மீறிய செயல்பாடுகள் எனக்கு அறிவிக்கப்பட்டவுடன் உடனடியாக குறித்த திணைக்களத்திற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்படுவதுடன் உரிய பின் தொடர்தல் மற்றும் அந் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். எனினும் இதுவரையிலும் வருடாந்த மீளாய்வு அறிக்கை ஒன்று தயாரிக்கப்படவில்லை என்பதுடன் அதனை எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு உரிய அறிவுரை பெற்றுக் கொண்டு தயாரிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இடர் முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக புத்தளம், மாதம்பே, தங்கொட்டுவ, ஆராச்சிகட்டுவ மற்றும் முந்தளம் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 07 உழவு இயந்திர பௌசர்கள் விளைவற்று காணப்பட்டன. | நீர் பகிர்ந்தளிக்கும் தேவைப்பாடு ஏற்படாமையால் உழவு இயந்திர பௌசர்கள் விளைவற்று காணப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | அரசின் வாகனங்களை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நாதாண்டிய பிரதேசர செயலகத்தின் உத்தியோகப்பூர்வ இல்லம் 2021 ஆம் ஆண்டில் ரூபாய்.1,504,322 செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும் பல வருடங்களாக பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்பட்டது. | உடைந்து வீழ்வதை தடுப்பதற்கு பழுதுபார்க்கப்பட்டதுடன் பிரதேச செயலகத்தின் மேலதிக பாவனை மற்றும் பராமரிப்புடன் பேணிச் செல்லப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கும் வருமானம் ஈட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2014 ஆம் ஆண்டு முதல் புத்தளம் செயலகத்திற்கு உரிய ரூபாய்.9,875,000 பெறுமதியான 03 உத்தியோக பூர்வ இல்லங்கள் 2023 மார்ச் மாதம் வரையிலும் விளைவற்று காணப்பட்டன. | நீண்ட காலமாக பழுதுபார்க்கப்படாமையால் உடைந்து விழும் நிலைக்கு உள்ளாகி இருந்ததுடன் உரிய நிதி ஏற்பாடு கிடைக்காமையினால் பழுது பார்க்க முடியாதிருந்தது. | உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கும் வருமானம் ஈட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பிரதேச செயலகங்களுக்குரிய உத்தியோகபூர்வ இல்லங்களை பரிசோதித்த போது மஹாகும்புக்கடவல, ஆனமடுவ, ஆராய்ச்சிகட்டுவ, நாத்தாண்டிய, முந்தளம், கற்பிட்டி மற்றும் சிலாபம் ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய 07 உத்தியோகபூர்வ இல்லங்கள் மீளாய்வாண்டின் இறுதித்திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | மஹாகும்புக்கடவல மற்றும் ஆனமடுவ ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உரிய உத்தியோகபூர்வ இல்லங்கள், களஞ்சியப்படுத்தல் போன்ற பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றமை, ஆராய்ச்சிகட்டுவ பிரதேச செயலகத்தினை எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், கறுவலகஸ்வெவ பிரதேச செயலகத்திற்கு உரிய உத்தியோகபூர்வ இல்லம் ஒன்றினை பழுதுபார்க்கும் நிலைமை காணப்படுகின்றமையும், நாத்தாண்டிய பிரதேச செயலகம், அலுவலகத்தின் அண்மையில் அமைந்துள்ளமையால் உத்தியோகபூர்வ இல்லம் பயன்படுத்தப்படுவதில்லை என்பதும் கற்பிட்டி உத்தியோகபூர்வ இல்லமானது பழுதுபார்க்கப்படுகின்றமையும் சிலாபத்தில் அமைந்துள்ள | உத்தியோகபூர்வ இல்லங்களை பாதுகாப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இடத்திற்கமைய பயன்படுத்துதல் சிரமமானது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஊ) | வனாத்தவில்லு, முந்தளம் ஆகிய செயலகங்களுக்கு சொந்தமான 03 பௌசர்கள் மற்றும் இரு கப் வண்டிகள் நீண்ட காலமாக பழுது பார்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலைக்கு உள்ளாகி இருந்தது. | காணாமல் போன பதிவுச் சான்றிதழை பெற்றுக்கொண்ட பின்னர் கைதவிர்ப்பதற்கு உரிய பெறுகை நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளப்படும். | சொத்துக்களை பாதுகாப்பாக தரித்து வைக்க வேண்டியதுடன் பழுதுபார்க்க முடியாத சொத்துக்களை முறையாக கைதவிர்க்க வேண்டும். |

### 3.6 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தின் பொறியியல் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கு அமைய பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களுக்காக சரளை கற்கள் ஒரு கியுபின் தள விலையானது (ஏற்றல் மற்றும் அரசிறை உள்ளடங்களாக) ரூபாய்.3,000 ஆக மாகாண விலை குழுவின் தளவிலை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் புத்தளம் மாவட்ட செயலாளரின் DSP/TFC/CS/01/மி.க./(1)/2021 மற்றும் 2021 ஜனவரி 01 ஆம் திகதிய மாவட்ட விலை குழு அறிக்கைக்கு அமைய ஒரு கியுப் சரளை கல்லின் ஏற்றல் மற்றும் அரசிறை உள்ளடங்களான தளவிலையானது ரூபாய்.2,000 என குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய 2021 ஆம் ஆண்டின் 13 பிரதேச செயலகங்களின் 89 செயற்திட்டங்களுக்காக | 2021 ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்ட விலை குழுவினை முதலாவது காலாண்டில் மாத்திரமே நடாத்தியிருந்தமையால் இரண்டாவது அரையாண்டுக்கான வடமேல் மாகாண விலை குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால் அதற்கான மேலதிக கொடுப்பனவு ஒன்று இடம்பெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை உரிய பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்ட 7482.8 கன மீட்டர்கள் அளவான சரளை கற்கள் அல்லது 2641.3 கியுப்கள் பயன்படுத்தும் போது ஒரு கியுபில் ரூபாய்.1,000 படி ரூபாய்.2,641,300 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிர்மாணிக்கப்பட்டவாறு காணப்பட்ட மாவட்ட செயலக அலுவலக தலைமை கட்டிடத்தின் 14 ஆவது பட்டியல் செலுத்துகை நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் தீர்ப்பனவு நடைமுறைக்கு சென்று 14 ஆவது பட்டியலை செலுத்துவதற்கு நேர்ந்தமையால் தாமத வட்டியாக ரூபாய்.10,349,580 செலுத்த நேர்ந்திருந்தது. | நிர்மாணத்திலான குறைபாடுகளின் அடிப்படையில் முன்னால் உத்தியோகத்தர்களினால் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டு ஒப்பந்த உடன்படிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பிணக்க தீர்ப்பனவு சபையின் நடைமுறை, தீர்ப்பனவு நடைமுறைக்குச் சென்ற காரணத்தால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் தீர்ப்பனவு தீர்மானத்திற்கு இணங்க இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய தாமத வட்டி உடன்படிக்கைக்கமைய செலுத்த நேர்ந்திருந்தது. | 14 ஆவது பட்டியல் செலுத்தும் உடன்படிக்கை நிபந்தனைக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள போது அதற்கமைய நடவடிக்கை எடுக்காமையால் வட்டி செலுத்த நேர்ந்துள்ளமையால் அது தொடர்பிலான பொறுப்பு நிச்சயப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மேற்படி விடயத்திற்குரிய நிர்மாணங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ரூபாய்.33,770,564 ஆன பொறியியல் மதிப்பீட்டினால் சான்றுபடுத்தப்பட்டிருந்த போதிலும் தீர்ப்பனவு நடைமுறையில் அதனை கருத்தில் கொள்ளாது செயல்பட்டமையால் அரசாங்கத்திற்கு ரூபாய்.18,235,507 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவினால் வழங்கப்பட்ட அறிக்கைக்கமைய திட்டத்தில் உள்ள குறைபாடுகளை குறிப்பிட்டு அத்திவாரத்தின் உட்புறம் அமைய வேண்டிய மட்டம் ஒரு சில பிரச்சனைக்குரிய நிலைமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் கட்டிடம் பயன்பாட்டுக்கு பொருத்தமானது என குறிப்பிடப்பட்டிராததுடன் தற்போதைய கட்டிடம் பயன்படுத்தப்படுகின்றமையானால் குறித்த நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரிடம் இருந்து நட்டத்தினை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்ளூராட்சி பிரிவு அபிவிருத்தியின் கீழ் பள்ளம பிரதேச செயலகத்தினால் பணிகள் நிறைவு செய்யப்பட்ட பெறுமதி ரூபாய்.259,601 ஆன அடமன சன சமூக நிலையத்தின் வேலியினை நிர்மாணித்தலின் கீழ் இறுதி பட்டியலுக்கு அமைய வேலியின் நீளம் 116 மீட்டர்களுக்கு ஒரு மீட்டருக்கு ரூபாய்.2,234 படியாக ரூபாய்.259,144 செலுத்தப்பட்டிருந்த போதிலும் வேலியின் நீளம் தொடர்பான பௌதிக பரிசோதனையில் 106.5 மீட்டர்கள் நீளமானமையால் மீட்டர் ஒன்றிற்கு ரூபாய்.2,234 படியாக 9.5 மீட்டர்களுக்கு ரூபாய்.21,223 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட பதிலின் பிரகாரம் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையை மீள அறவிட்டிருந்த போதிலும் குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கள உத்தியோகத்தர்கள் மற்றும் செயல்திட்ட பரிசோதனை வரையிலும் பயணித்த பிரயாணங்களுக்கான செலவினங்கள் மற்றும் விடுமுறை தின சம்பளங்கள் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் உரிய முறையில் கடமைகளை நிறைவேற்றி இருக்கவில்லை. | இச் செயற்திட்டத்தினை பௌதீக ரீதியில் அளவிடும் போது தவறுதலாக 9.5 மீட்டர்களுக்கு ரூபாய்.21,223 கூடுதலாக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டுள்ளமையால் அத்தொகையை கணக்காய்வினால் அறிவிக்கப்பட்டதன் பின்னர் மீள அறவிட்டுள்ளமையும் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் விடுதலைக்கான காரணங்கள் கோரப்பட்டுள்ளமையையும் தெரிவித்துக் கொள்கின்றேன். | செயற்திட்ட கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் ஒருங்கிணைந்து பொறுப்பு கூற வேண்டும். |
| (ஆ) புத்தளம் மாவட்ட | 03 உத்தியோகத்தர்களுக்கு | நினைவுறுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | செயலகத்திற்கு உரிய வென்னப்புவ, ஆனைமடு மற்றும் ஆராய்ச்சிகட்டுவ ஆகிய மூன்று பிரதேச செயலகங்களுக்கு உரிய 05 உத்தியோகத்தர்களுக்கான ஆரம்ப விசாரணை பரிந்துரைகளில் குற்ற பத்திரம் விநியோகிக்கப்பட்டு முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதி வரையிலும் உத்தியோகத்தர்களுக்கு உரிய குற்ற பத்திரங்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | உரிய குற்ற பத்திரங்கள் கையளிக்கப்பட்டுள்ளது என்பதும் 05 உத்தியோகத்தர்களுக்கு உரிய குற்ற பத்திரங்கள் வரைபாகப்பட்டு குறித்த அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | கடிதங்கள் அனுப்பப்பட்டு குற்ற பத்திரங்களை வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | புத்தளம் மாவட்ட செயலகத்திற்கு உரிய தற்போதைய மதிப்பீட்டு பெறுமதி ரூபாய்.255,800,000 ஆன 08 உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள 01 ஏக்கர் 02 றூட் 14.7 பேர்ச் பரப்பளவான காணி புத்தளம் நகர சபையினால் நிர்மாணிக்கப்படும் அல்பா வணிக கட்டட தொகுதி மற்றும் அதன் வாகன தரிப்பிடத்திற்காக புத்தளம் நகர சபைக்கு சுவீகரிக்கப்பட்டு அதற்கு பதிலாக புத்தளம் டிப்போ அருகில் நகர சபைக்கு உரிய காணியில் 01 ஏக்கர் வழங்கப்பட்டு 08 உத்தியோகபூர்வ இல்லங்களின் தற்போதைய மதிப்பீட்டு பெறுமதிக்கு சமனான 04 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிப்பதற்கு உரிய பணம் மாவட்ட செயலகத்திற்கு வழங்குவதற்கு இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது டன் நபர்களை குடியேற்றுவதற்கு பொருத்தமான நிலைமையில் உள்ள இந்த 08 உத்தியோகபூர்வ இல்லங்களில் 05 இனை மதிப்பீடு செய்வதற்கு முன்னர் | இருதரப்பினரும் இணங்கிய விதத்தில் துரிதமாக பணிகளை நிறைவு செய்யுமாறு DSP/ADM.4/DEV/02/10/2 ஆம் இலக்க மற்றும் 2023.04.06 ஆம் திகதிய கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் முன்னுரிமை வழங்கி இந்த பணியை நிறைவு செய்வதற்கு உத்தியோகத்தர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டது. | காணிகளை தாமதம் இன்றி பெற்று திட்டமிட்டவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடைத்து அகற்றப்பட்டிருந்தது. அவ்வாறே 2023 மார்ச் வரையிலும் அக்காணியை சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 1999 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதியினுள் புத்தளம் மாவட்ட செயலகத்திற்கு உரிய 09 உத்தியோகபூர்வ இல்லங்கள் வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 08 உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து இதுவரையிலும் மாதாந்த வாடகைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. இடர் முகாமைத்துவ பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லம் 2022 ஆம் ஆண்டில் ரூபாய்.1,280,862 செலவிடப்பட்டு பழுதுபார்க்கபட்டிருந்த போதிலும் கட்டணங்களை அறவிடாது வழங்கப்பட்டிருந்தது. | கட்டணங்களை அறவிடாது அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோக பூர்வ இல்லங்களுக்காக அந்த அரச நிறுவனங்களில் இருந்து வாடகை ஒன்றினை அறவிடுவதற்கு அல்லது அந்த நிறுவனங்களுக்கு அக்கட்டிடங்களை சுவீகரிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவித்துள்ளதுடன் விரிவான அறிக்கை ஒன்று துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்கின்றேன். | ஏனைய அரச நிறுவனங்களுக்கு அரசின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வஇல்லங்களில் இருந்து வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (உ) | 2022 டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் உத்தியோகபூர்வ இல்லம் ஒன்றினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் 2019 ஜனவரி மாதம் முதல் உத்தியோகபூர்வ இல்லம் ஒன்றை கோரிய 20 உத்தியோகத்தர்களுக்கு புத்தளம் மாவட்ட செயலகத்தின் காத்திருப்போர் பட்டியலில் உள்ள போது உத்தியோகபூர்வ இல்லத்தில் 05 வருடங்களை விஞ்சி வசிக்கும் உத்தியோகத்தர்கள் 07 பேர் அவற்றில் தற்போது வரையிலும் வசிக்கின்றனர். | 05 வருடங்களைக் கடந்து வசிக்கும் உத்தியோகத்தர்களின் வதியும் காலத்தினை நீடித்தல் இம்மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | புத்தளம் மாவட்ட செயலகத்தின் 18 செயற்த்திட்டங்களுக்கு உரிய ரூபாய்.5,816,107 மற்றும் 13 பிரதேச செயலகங்களுக்கு உரிய 595 செயல்திட்டங்களுக்கு உரியதாக விடுவிக்கப்பட வேண்டிய ரூபாய்.36,519,589 பெறுமதியான பிடிக்காசு 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | போதிய கட்டு நிதி கிடைக்க பெறாமையால் பிடி காசினை விடுவிக்க முடியாதுள்ளது. 2023 ஆம் ஆண்டிலும் கட்டுநிதி கோரப்பட்ட போதிலும் இதுவரையிலும் கட்டி நிதி கிடைக்கப்பெறவில்லை. | கட்டுநிதியைப் பெற்று பிடி காசினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கட்டிடம் ஒன்றினை நிர்மாணிக்கும்போது அதற்கு அருகில் அமைந்துள்ள அதி சக்தி வாய்ந்த மின்சார கம்பிகள் காணப்படின் அவற்றின் கிடைமட்ட மற்றும் செங்குத்து தூரம் (Horizontal & Vertical Distance) மற்றும் அதன் மூலம் உடல் ரீதியாக ஏற்படக்கூடிய காந்தப்புல தாக்கம் (Magnetic Impact) கருத்தில் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அது தொடர்பில் கருத்துக் கொள்ளாது முந்தளம் பிரதேச செயலகத்தின் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. சுவரிலிருந்து 2.5 அடிக்கு அருகாமையில் உள்ள இந்த மின்சார கம்பிகளை அகற்றுமாறு கட்டிடத்தின் 03 ஆம் கட்டத்தில் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மின்சார சபையிடம் கோரியுள்ளதுடன் அதற்காக ரூபாய்.4,023,389 செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. | மின்சார சபையினால் 2021.08.06 ஆம் திகதி ரூபாய்.4,023,989 பெறுமதியான மதிப்பீடு ஒன்று அனுப்பப்பட்டிருந்த போதிலும் தற்போது அனைத்து நிர்மாணங்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளமையால் இந்த மின்சார கட்டமைப்பினை அகற்றுவதற்கு அவசியமற்றது என்பதும் இந்த கட்டிடத்தினை பயன்படுத்தும் போது அது தடை ஒன்றாக அமையாது எனவும் பிரதேச பொறியியலாளரின் வாமேமா/சிலா/பிக/15 ஆம் இலக்க மற்றும் 2022.07.25 ஆம் திகதிய சாத்தியவள அறிக்கையின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்ளக்கூடிய விஞ்ஞானபூர்வமான பதில் ஒன்று முன் வைக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புத்தளம் மாவட்ட செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் 13 பதவிகளுக்கு உரியதாக 22 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | உத்தியோகத்தர்கள் இடமாற்றங்கள், ஓய்வு பொறல்கள், சேவையை கைவிட்டு செல்லல், சேவை வெறிதாக்கப்படல் போன்ற விடயங்களினால் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு மாதமும் காலாண்டு ரீதியாகவும் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவலகங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 204 அங்கீகரிப்பதற்கு நி.பி 71 இன் கீழ் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் புதிய நியமனங்கள் கிடைத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் 16 இற்கு இணைப்பு செய்யப்பட்டுள்ளதுடன் அதனால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மிகையொன்று இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிலவும் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கும் மிகைப் பதவியணியை பொருத்தமான இடங்களுக்கு இணைப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | புத்தளம் மாவட்ட செயலகத்திற்கு உரிய பிரதேச செயலகங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் 19 இற்கு உரிய 316 வெற்றிடங்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு உரிய 133 மிகைகள் காணப்பட்டன. | மேற்படி | மேற்படி |
| (இ) | 2022 டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் பிரதேச செயலகங்கள் 16 இற்கு உரிய 09 நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள், 10 மேலதிக மாவட்ட பதிவாளர் பதவிகள், 115 கிராம உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 35 அலுவலக உதவியாளர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | மேற்படி | மேற்படி |